[2019 ஜனவரி 8

39—

தொழிற்பேட்டை

***35968—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.

திரு. எஸ். பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று வாழ்ந்து, தமிழ்நாட்டு மக்கள் மனதிலே நீக்கமற நிறைந்திருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகின்றேன்.

என்னுடைய பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியப் பகுதியில் வாழ்கின்ற படித்த மாணவர்கள், விவசாயக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள். இந்தப் பகுதியில் இருக்கின்ற படித்த பட்டதாரி மாணவர்களுக்கு சொந்தமாகத் தொழில் செய்வதற்கு ஏதுவாக, அந்தப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்தால், படித்து வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்தி, அதை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

2019 ஜனவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதியில் அமைந்துள்ள செம்பனார்கோவில் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க நாகப்பட்டினம் மாவட்ட நிருவாகத்துடன், சிட்கோ நிறுவனத்தால் கலந்தாலோசிக்கப்பட்டது. செம்பனார்கோவில் ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான 15 முதல் 30 ஏக்கர் வரையிலான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை எனவும், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட தரங்கம்பாடி வட்டம், சீர்காழி வட்டம், மயிலாடுதுறை வட்டம் மற்றும் குத்தாலம் வட்டம் ஆகிய வட்டங்களிலும் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை எனவும் நாகப்பட்டினம் மாவட்ட நிருவாகம் தெரிவித்துள்ளது. எனவே, பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியத்தில் உகந்த நிலம் கிடைக்கப்பெறாததால், அங்கு சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான 40 ஏக்கர் நிலம் திருக்குவளை ஊராட்சியில் அமைந்துள்ளது. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, விளைநிலமாக இருக்கின்ற அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அங்கே தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்தால், படித்த மாணவர்களுக்கு நிச்சயமாக வேலைவாய்ப்பு வழங்க ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்திச் சொல்லி, இதைப்பற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்த இடத்தை மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***11890—திரு. என். சுரேஷ் ராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் மாவட்ட நிருவாகத்தின் பரிசீலனையில் உள்ளது. நிலமாற்றம் செய்யப்பட்டவுடன், உரிய நிதியைப் பெற்று சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.